www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

ARIYALUR DISTRICT



பதிவெண் : 0 1 0 3 0 1

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

**10-ம் வகுப்பு** **தமிழ்** மதிப்பெண்கள் : 100

நேரம் : 3.00 மணி

## பகுதி -I

குறிப்பு : I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

II. கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும். 15×1=15

1. காய்ந்த இலையும் காய்ந்த தோகையும் நிலத்துக்கு நல்ல உரங்கள் இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது.

அ) இலையும் சருகும் ஆ) தாளும் ஓலையும் இ) தோகையும் சண்டும் ஈ) சருகும் சண்டும்

2. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லை பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தியாது?

அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்

இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

3. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' - யாரிடம் யார் கூறியது?

அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்

இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

4. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

5. 'மாயிரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி.

அ) சங்ககாலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழி பெயர்ப்பு இருந்தது

6. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?

அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்

இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

7. குளிர்காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் .............

அ) முல்லை , குறிஞ்சி, மருத நிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல், நிலங்கள்

இ) குறிஞ்சி மருதம் நெய்தல் நிலங்கள் ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

8. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் ............

அ) அகவற்பா ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

9. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவாடு காக்க என்று ............வேண்டினார்

அ) கருணையின், எலிசபெத்துக்காக ஆ) எலிசபெத்தமக்காக

இ) கருணையின் பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக

10. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாறுமாக ஜெயகாந்தன் கருதுவது

அ) அரசின் நலத்திட்டங்களைச்செயல்படுத்தல் ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தல்

இ) அறிவியல் முன்னேற்றம் ஈ) வெளிநாட்டு முதலீடுகள்

11. "செறிந்த" என்பதன் இலக்கணக்குறிப்பு .......

அ) தொழிற்பெயர் ஆ) உரிச்சொற்றொடர் இ) வினைத்தொகை ஈ) பெயரெச்சம்



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



பாடலை படித்துரு பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள் கைய
கொடுங்கோற் கோவிலர் பின் நின்று உய்த்தர

12. இப்பாடல் இடம் பெற்ற நூல் எது?
அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம் இ) கனிச்சாறு ஈ) முல்லைப் பாட்டு
13. இப்பாடல் ஆசிரியர் யார்?
அ) நப்பூதனார் ஆ) முன்னுரையரையனார் இ) கணிமேதாவியார் ஈ) நத்தத்தனார்
14. "உறுதுயர்" இலக்கணக் குறிப்புத் தருக.
அ) பண்புத்தொகை ஆ) வினைத்தொகை இ) உவமைத்தொகை ஈ) உம்மைத் தொகை
15. பாடலில் அமைந்த சுவல் என்ற சொல்லின் பொருள்
அ) மலை ஆ) தோள் இ) காடு ஈ) வீடு

## பகுதி - II

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும் வினா எண் 21க்கு கட்டாயமாக விடையளிக்கவும். 4×2=8

16. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்கவும்
அ) அறிவியலின் வளர்ச்சி மனிதனின் அறிவை விரிவாக்குகிறது
ஆ) பரிபாடல் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று
18. வசன கவிதை - குறிப்பு வரைக.
19. செங்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக எழுதுக.
20. 'கால்மணியாகு முன்னர்க் காய்ந்தெனக்காய்ந்தேன்' - உவமை உணர்த்தும் கருத்து யாது?
21. 'எப்பொருள்' எனத் தொடங்கும் குறளை எழுதுக.

## பகுதி - III

குறிப்பு : எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். 5×2=10

22. "எழுது என்றாள்" என்பது விரைவு காரணமாக "எழுது எழுது என்றாள்" என அடுக்குத் தொடரானது அப்படியானால் சிரித்துப் பேசினார் என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?
23. இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்கவும்
அ) சிலை - சீலை ஆ) மலை - மாலை
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக - மயங்கிய
25. கலைச்சொற்கள் தருக - அ) Humanism ஆ) Myth
குறிப்பு : செவி மாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா குறிப்பு - எதிர்மறையாக மாற்றுக
அ) பார்த்தபடம் ஆ) எழுதாக்கவிதை
26. மரபுத் தொடருக்கான பொருளறிந்து தொடரில் அமைத்து எழுதுக.
அ) ஆறப்போடுதல் ஆ) மனக்கோட்டை
27. பழமொழிகளை நிறைவு செய்க. அ) ஒரு பானை - ஆ) விருந்தும் -
28. குறள் வெண்பாவின் இலக்கணம் எழுதுக?

## பகுதி - IV (மதிப்பெண்கள் : 18) பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2×3=6

29. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக?
30. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
சீன நாட்டில் காண்டன் நகருக்கு 500 கல் வடக்கே சூவன் சௌ என்னும் துறைமுக நகர் உள்ளது. வணிகத்திற்காகத் தமிழர்கள் அடிக்கடி சூவன்சௌ நகருக்குச் சென்றதால் சிவன் கோவில் ஒன்று அங்கே கட்டப்பட்டது என்தற்கான தமிழ்க்கல்வெட்டு அங்குள்ளது. இக்கோயிலில் சோழர்காலச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



அ) சூவன் சௌ என்னும் துறைமுக நகர் எங்கு உள்ளது?

ஆ) யாருடைய ஆணையின் கீழ் சிவன் கோவில் கட்டப்பட்டது?

இ) தமிழர்கள் எதற்காக சீனாவிற்குச் சென்றனர்?

31. தாவரங்களின் இளம் பருவத்திற்கான சொற்களையும் அதற்குரிய தாவரங்களின் பெயர்களையும் எழுதுக?

பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2×3=6

வினா எண் 34 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32. நெடுநாளாகப் பார்க்க எண்ணியிருந்த உறவினர் ஒருவர் எதிர்பாராத வகையில் உங்கள் வீட்டிற்கு வந்தால் அவரை விருந்தோம்பல் செய்வதைக்குறித்து எழுதுக.

33. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?

34. அடிபிறழாமல் எழுதுக.

அ) "அன்னை" எனத் தொடங்கி "பேரரசே" என முடியும் அன்னை மொழியே பாடல்

(அல்லது)

ஆ) "தண்டலை" எனத்தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் 2×3=6

35. தீவக அணியை விளக்குக?

36. "கண்ணே கண்ணுறங்கு
காலையில் நீயெழும்பு
மாமழை பெய்கையிலே
மாம்பூவே கண்ணுறங்கு!
பாடினேன் தாலாட்டு!
ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!"

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

37. குற்றம் இலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்
சுற்றமாச் சுற்றும் உலகு - இக்குறப்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 5×5=25

38. அ) கூத்தனைக் கூத்தன் ஆற்றுப் படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

(அல்லது)

ஆ) சித்தாளின் மனச்சுமையாக நாகூர் ரூமி கூறும் செய்திகளை தொகுத்து எழுதுக?

39. அ) புதிதாகத் திறன்பேசி வாங்கியிருக்கும் உங்கள் தம்பிக்கு, அதனை முறையாகப் பயன்படுத்தும் வழிமுறைகளை விளக்கி, அறிவுரைகள் கூறிக் கடிதம் ஒன்று எழுதுக.

(அல்லது)

ஆ) உம் ஊருக்கு நூலக வசதி வேண்டி மாவட்ட ஆட்சியருக்கு கடிதம் ஒன்று எழுதுக.

40. அ) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.





Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



41. கொடுக்கப்பட்ட படிவத்தை நிரப்புக -

குறிப்பு : - கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டத்தைச் சார்ந்த மணிகண்டன் மகன் குமரவேல் என்பவர் மேல்நிலை வகுப்பில் வரலாறு பாடப்பிரிவில் சேர உள்ளார். தேர்வர் தம்மை குமரவேலாக நினைத்து கொடுக்கப்பட்ட படிவத்தை நிரப்புக.

42. அ) மாணவ நிலையில் நாம் பின்பற்ற வேண்டிய அறங்களையும் அதனால் ஏற்படும் நன்மைகளையும் அட்டவணைப்படுத்துக. (அல்லது)

ஆ) மொழிபெயர்க்கவும் : -

Among the five geographical divisions of the Tamil country in Sangam literature, the Marutam region was fit for cultivation, as it had the most fertile lands. The property of a farmer depended on getting the necessary sunlight, seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, sunlight was considered indispensable by the ancient Tamils.

குறிப்பு : செவி மாற்றுத்திறனாளர்களுக்கான வினா உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு தலைவாழை இலையில் விருந்தினருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது. நம் மக்கள் வாழை இலையின் மருத்துப் பயன்களை அன்றே அறிந்திருந்தனர். உண்பவரின் மனமறிந்து உணவு வகைகளைப் பரிமாறுவர்.

1. தமிழர் பண்பாட்டில் எதற்கு தனித்த இடமுண்டு?
2. யாருக்கு உணவளிப்பது நம் மரபாகக் கருதப்படுகிறது?
3. நம் மக்கள் வாழை இலையின் எந்தப் பயன்களை அறிந்திருந்தனர்?
4. உண்பவரின் எந்த நிலையை அறிந்து உணவு பரிமாறுவர்?
5. இப்பத்திக்கு ஏற்ற தலைப்பினைத் தருக?

## பகுதி - V

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் 3×8=24

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கரை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துகளை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிபாடுகள் பற்றி ஒருகட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) எவரேனும் ஓர் அறிஞர் / சான்றோர் / புகழ்பெற்ற சாதனையாளர் வாழ்வில் நடந்த நிகழ்வுகளில் ஒன்றை அவரே சொல்வதைப் போன்று தன் வரலாறாக மாற்றி எழுதுக.

44. அ) "கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க. (அல்லது)

ஆ) துணையின்றி வாழும் நிலை இரங்கத்தக்கது எப்படிபட்டவராக இருந்தாலும் பிறரது துணையைச் சார்ந்திருக்க வேண்டும் என்பதை கு.அழகிரிசாமியின் ஒருவன் இருக்கிறான் கதை வாயிலாக விளக்குக.

45. அ) குறிப்புகளை கொண்டு கட்டுரை எழுதுக. முன்னுரை - விசும்பின் துளி - விண்ணின் மழைத்துளி - வான் சிறப்பு - மரம் வளர்ப்போம் - பசும்புல் நுனி - இயற்கையப் போற்றுவோம் - முடிவுரை. (அல்லது)

ஆ) அரசுப் பொருள் காட்சியில் நீங்கள் கண்ட சூழலைக் குறிப்புகளின் உதவியோடு கட்டுரை எழுதுக.

முன்னுரை - அரசுப் பொருட்காட்சி அறிவிப்பு - அமைவிடம் - நிகழ்த்தப்பட்ட நிகழ்கலைகள் - அங்காடிகள் - பல்துறைக்காட்சிகூடங்கள் பொழுது போக்கு விளையாட்டுகள் - பலவித உணவுகள் - பெருமித உணர்வுகள் - முடிவுரை.

************



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com